# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201037
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 084/2017/ந

ஆணை எண்: 155/2017

நாள்: 16/06/2017

M.A.ஷேக்,
93A/144, K.T.M. தெரு,
காயல்பட்டணம் - 628 204.
தூத்துக்குடி மாவட்டம். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
காயல்பட்டணம் நகராட்சி. – **எதிர் மனுதாரர்**

முறையீட்டு மனுதாரர் திரு. எம். ஏ. ஷேக் என்பவரது 10.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 17.4.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0084/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளின் போது போக்குவரத்து மற்றும் பாதசாரிகளுக்கு இடையூறாகவும் சட்டத்திற்கு முரணாகவும் சாலைகளில் பந்தல்கள் அமைக்கப்படுவதாகவும், இது குறித்து நகராட்சி ஆணையர் மற்றும் பிற அலுவலர்களுக்கு மனு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பதிலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு காயல்பட்டணம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.084/17/ந நாள்:19.04.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், 31.5.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு மனுதாரருக்கு அழைப்பாணை (முறையீட்டு மனு எண்.084/17/ந நாள். 20.4.2017) அனுப்பப்பட்டது.

நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.120/2017/அ1, நாள்:02.05.2017 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின்போது தெருக்களில் பந்தல் அமைப்பதற்கு தற்காலிக ஆக்கிரமிப்பு எனக் கருதி 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 183(2)(3)ன் கீழ் உரிமம் வழங்கி மன்ற தீர்மானத்தின்கீழ் கட்டணம் வசூலிக்கப்படுவது வழக்கமாக இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இனிவரும் காலங்களில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் தெருக்களில் பந்தல் அமைப்பதற்கு உரிய நிபந்தனைகளுடன் உரிமம் வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

31.05.2017 அன்று முறையிட்டு மனுதாரர் இம்முறைமன்ற விசாரணைக்கு ஆஜராகி புகாரில் குறிப்பிட்டுள்ள தனது கோரிக்கையினை வலியுறுத்தி பொது மக்களுக்கு முழுவதும் இடைஞ்சலாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டுமென வேண்டுகோள் வைத்ததுடன்,தெருக்களில் மாடுகள் மற்றும் நாய்கள் திரிவதும் பொது மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாகவும் நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர் தொட்டிகளை முறையாக பராமரிப்பதில்லை எனத் தெரிவித்தும் தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார். மேலும், இத்தகைய இடையூறுகளை கண்டித்து நகராட்சிக்கு அனுப்பியுள்ள கோரிக்கைகள் மற்றும் பத்திரிக்கை செய்தி நறுக்குகளையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 183 (4)ன் படி "பிதுக்கம் அல்லது கட்டுமானம் பொது மக்களின் உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என்று அல்லது பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் என்று அல்லது சாலையைப் பயன்படுத்துவதில் பிறவகையில் தலையீடாக அமையும் அல்லது தடை உண்டாக்கும் என்று தோன்றினால் (1)-வது உட்பிரிவின் கீழ் உரிமம் அல்லது (2)வது உட்பிரிவின் கீழ் குத்தகை எதுவும் வழங்கப்படக்கூடாது" என்றுள்ளது.

இந்நிலையில் உள்ளூர் தன்மை மற்றும் நிலையினையும் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாவண்ணம் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டிடுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. மனுதாரர் தெரிவித்துள்ளது மட்டுமன்றி பத்திரிக்கைச் செய்திகளிலும் வெளிவந்துள்ளது போல் சாலை மற்றும் பொது இடங்களில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நாய்கள், மாடுகள் போன்ற பிராணிகள் திரிவதை தடுக்க முறைப்படியான மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் ஆணையிடப்படுகிறது. மேலும், பொது மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நகராட்சி தண்ணீர் தொட்டிகள் முறையாக பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் உரிய கால அளவில்

கண்காணிக்கப்படுவதையும் உறுதி செய்து கொள்ள வேண்டுமெனவும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   காயல்பட்டணம் நகராட்சி,
   காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம் - 628 204.

2. M.A.ஷேக்,
   93A/144, K.T.M. தெரு,
   காயல்பட்டணம் - 628 204.
   தூத்துக்குடி மாவட்டம்.

நகல்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம்,
திருநெல்வேலி.